[1981 ஏப்ரல் 4

காயல்பட்டினம் அரசு மருத்துவ மனை

*வினா எண். 606—திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி காயல்பட்டிணம் அரசினர் மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(ஆ) அந்த மருத்துவமனைக்கு தனியார் ஒருவர் நன்கொடையாக வழங்கிய மருத்துவக் கருவிகள் பயன்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) அப்படியானால் அதற்கான பரிகாரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 25 (இருபத்தைந்து).

(ஆ) அந்த மருத்துவமனைக்கு தனியார் எவராலும் எந்த வித மருத்துவக் கருவிகளும் நன்கொடையாக வழங்கப்படவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. கேசவ ஆதித்தன் : தலைவரவர்களே, காயல்பட்டிணம் மருத்துவமனையைச் சுற்றி திருச்செந்தூர், குறும்பூர் போன்ற ஊர்கள் இருக்கின்றன. சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர் அந்தப் பகுதிகளில். இவர்கள் எல்லாம் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றால் 40 மைலுக்கு அப்பாலுள்ள திருநெல்வேலிக்கோ அல்லது 25 மைலுக்கு அப்பாலுள்ள தூத்துக்குடிக்கோ தான் செல்ல வேண்டி இருக்கின்றது. எனவே, காயல் பட்டிணம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவை, ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையின் முக்கியத்துவத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் சேர்ந்து அந்த மருத்துவ மனையைப் பார்த்து இருக்கிறோம். அங்கே அறுவை சிகிச்சைப் பிரிவு நன்றாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே என்னென்ன ஆபரேஷன் செய்யப்படுகின்றது என்ற லிஸ்ட் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றது. அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கையினை அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.